மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இந்த கண்மாய் 1971–72-ல் மராமத்து செய்யப்பட்டது. இந்தக் கண்மாயை தூர் வாரும் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொண்டால் எரியின் எதிர்வாயிலில் உள்ள நிலங்களின் சொந்தக்காரர்கள் பலத்த ஆட்சேபனை செய்வார்கள். ஆகவே, தூர் வாரும் வேலையை ஒத்தி வைத்து, தேவையில்லை என்று கருதி, மராமத்து மட்டும் செய்யலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம்.

*441. வினா.—திரு. த. சோனையா: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், மிளகனூர் கண்மாயை ஆழப்படுத்தும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு த. சோனையா: தலைவரவர்களே, மானாமதுரை ஊராட்சி ஒன்றியம் மிளகனூர் கண்மாய் அந்தப் பகுதியிலே பெரிய கண்மாயாகும். அந்தக் கண்மாய் ஏற்கெனவே ஜமீன்தார் காலத்தில் வெட்டப்பட்டது என்றும் அதற்குப்பிறகு அந்தக் கண்மாயை ஆழப்படுத்தவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் சொல்கிறார்கள். அதை ஆழப்படுத்தினால் தீவிரத் திட்ட சாகுபடிக்கு ஏற்ப அதிகமான விளைச்சல் உண்டாகும். அதை மனதில் கொண்டு அதில் தீவிர முயற்சியில் அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இந்தக் கண்மாயை ஆழப்படுத்தும் திட்டம் எதுவும் ஆய்வில் இல்லை. ஆனால் மராமத்து செய்ய மதிப்பீடு ஒப்புதல் அளிக்கப்பட்டு, வேலை நடந்து வருகிறது.

*442. வினா.—திரு. த. சோனையா: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், கட்டிக்குளம் கண்மாயை ஆழப்படுத்தும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா

(இ) ஆம் எனில், மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. த. சோனையா: தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் பெரிய கண்மாய் இராமநாதபுரம் கண்மாய். அதற்கு அடுத்தபடியாக உள்ள இரண்டாவது பெரிய கண்மாய் இந்த கட்டிக்குளம் கண்மாயாகும்.

TRUTH ALONE TRIUMPHS

1974 மார்ச் 15]

இது மானமதுரை ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிறது என்பது நம்முடைய அமைச்சரவர்களுக்கு நன்கு தெரியும். இந்தப் பெரிய கண்மாயில் இன்னும் மராமத்து செய்யவில்லை என்ற பெருங்குறை அந்தப் பகுதியிலுள்ளவர்களுக்கு இருக்கிறது. இந்த அரசாங்கம் எத்தனையோ கண்மாய்களை வெட்டிக் கொடுத்து எவ்வளவோ உதவிகளைச் செய்திருக்கும்பொழுது இந்தக் கண்மாயைமட்டும் ஏனோ மறந்துவிட்டது. இனிமேலாவது இதை மராமத்து செய்து அல்லது ஆழப்படுத்தி அதிகத் தண்ணீரை தேக்கிக் கொள்வதற்குத் தீவிரத் திட்டத்தை ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ஆழப்படுத்துவது என்பது வேறு. தூர் வாருவது வேறு. கண்மாயை வெட்டுவது என்பது வேறு. இந்த ஆண்டு மராமத்து செய்ய எடுத்துக்கொள்ளப்படும்.

தொட்டியம்-சீனிவாசநல்லூர் சாலை.

*443 வினா :— திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) முசிறி வட்டம், தொட்டியத்திலிருந்து சித்தூர் வழியாக சீனிவாச நல்லூர் வரை செல்லும் சாலை மிகவும் பழுதடைந்திருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதை செப்பனிடுவதற்கான நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, பொதுப்பணித் துறையின் சார்பாக அந்தச் சாலையைச் செப்பனிடுவதற்கு ஒரு திட்டம் இருந்ததே, அது கைவிடப்பட்டதா ? அப்படியென்றால் இனிமேலாவது அதைச் சேர்க்க உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் முயற்சிப்பார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே, முசிறி வட்டம் தொட்டியத்திலிருந்து சித்தூர் வழியாக சீனிவாசநல்லூர் வரை செல்லும் இந்தச் சாலை தொட்டியம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தது. அவர்கள் நிதிநிலை பற்றாக்குறையாக இருப்பதால் செய்ய இயலவில்லை என்று சொன்னதால் மேற்படி சாலையை ஏறத்தாழ 5 இலட்சம் ரூபாயில் திட்டம் தயார் செய்யப்பட்டு, இந்த ஆண்டு சிறப்பு கிராமச் சாலை திட்டத்தின்கீழ் போட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.